000006

இலங்கை நில அளவைத் திணைக்களம்

தரம் II இலிருந்து தரம் I க்கு பதவி உயர்வுக்காக நில அளவை கள உதவியாளர்கள் இரண்டாவது தகுதிகாண் பரீட்சை - 2022 - மே

எழுத்துப் பரீட்சை

2022.05.21 காலம் : 2 மணித்தியாலங்கள் 0930 - 1130 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவும்.

---

(1)

I. உத்தியோகபூர்வ கடிதத்தை எழுதும் போது, அந்தக் கடிதத்தில் சேர்க்கப்பட வேண்டிய மூன்று விடயங்களை எழுதுங்கள்.

II. அலுவலகத்திற்கு கடிதங்களைப் பெறுவதற்கான 03 முறைகளை எழுதுங்கள்.

III. ஒரு அரசாங்க ஊழியர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய இரண்டு (02) ஆவணங்களை எழுதவும்.

IV. நினைவூட்டற் தினப்பதிவேடு என்றால் என்ன?

V. பல நகல் புத்தகத்தால்(Duplicate Book) என்ன பயன்?

*(புள்ளிகள் 10)*

(2) புலப் புத்தகத்தில் பின்வருவனவற்றை எந்த குறியீடுகள் குறிப்பிடுகின்றன என்பதை விளக்கவும்.

I. பாறைக் கல் முளை

II. அளவைக் கோடு

III. திரிகோண கணித நிலையம்

IV. பாறை எல்லை கல்

V. நடைபாதை

*(புள்ளிகள் 10*

(3) ஒரு பெரிய நிலத்தை அளவிடும் போது, பின்வரும் விவரங்களை கிடைப்படத்தில் காட்டப்படும் முறையைத் தருக.

I. நிரந்தரக் கட்டிடம்

II. கிராம எல்லை

III. மாவட்ட எல்லை

IV. பீடக் குறி

V. நீர்வழிப்பாதையில் நீர் ஓட்டத்தின் திசை

*(புள்ளிகள் 10 )*

(4)

I. நிலஅளவைச் சேவையின் நிலஅளவையாளர் நாயகத்தின் கீழே உள்ள பதவிகளை எழுதுங்கள்.

II. சரிபார்ப்பு (Check Roll) என்றால் என்ன? பின்வருவனவற்றை எவ்வாறு குறிப்பது?

i. வருகை ii. வருகை தராமை iii. விடுமுறை iv. அமைய விடுமுறைகள் v. ஊதியம் இல்லா விடுமுறை

*(புள்ளிகள் 10 )*

(5)

I. நில அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் ஐந்து வகையான அளவைகளைக் குறிப்பிடவும்?

II. நில அளவைத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் எல்லைக் கற்களின் வகைகள் என்ன?

III. புலத்தில் காணப்படும் பழைய எல்லைக் கல்லை நில அளவைத் திணைக்களத்தின் எல்லைக் கல்லாக எவ்வாறு அடையாளப்படுத்துவது?

IV. அளவையின்போது எல்லைக் கல் மற்றும் முளை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் என்ன?

*(புள்ளிகள் 10 )*

(6)

I. ஒரு அரசஅதிகாரி ஒரு நேரத்தில் எடுக்கக்கூடிய அதிகபட்ச அமைய விடுமுறைகள் எத்தனை?

II. ஒரு அரச அதிகாரிக்கு ஒரு வருடத்திற்கு அதிக பட்சம் எடுக்கக்கூடிய அமைய மற்றும் ஓய்வு விடுமுறைகள் எத்தனை?

III. அவசர விடுமுறை எடுக்கும் சந்தர்ப்பம் என்ன?

IV. தந்தைக்குரிய விடுமுறையின் எடுக்கக்கூடிய வேலை நாட்களின் எண்ணிக்கை என்ன?

V. எந்த அதிகாரிகளுக்கு தந்தைக்குரிய விடுமுறை உண்டு? *(புள்ளிகள் 10 )*

(7)

I. ஒரு பக்கத்தில் 25 மீ நீளமுள்ள ஒரு சதுர நிலத்தின் பரப்பளவு எத்தனை சதுர மீற்றர்?

II. மேலே உள்ள (I) ஐ ஹெக்டேயரில் குறிப்பிடவும்.

III. ஒரு பேர்ச் என்பது அண்ணளவாக எத்தனை சதுர மீற்றர் என்பதைக் குறிக்கவும்.

IV. ஒரு ஏக்கருக்கான ரூட் எண்ணிக்கை எவ்வளவு?

V. ஒரு ஏக்கருக்கு எத்தனை பேர்ச்கள் உள்ளன? *(புள்ளிகள் 10 )*

(8)

I. பயணச் செலவுகளைக் கோருவதற்கு ஒரு அரசாங்க அதிகாரி பூர்த்தி செய்ய வேண்டிய இரண்டு தேவைகளைக் குறிப்பிடவும்.

II. நீங்கள் 24 மணி நேரத்திற்கும் மேலாக பணியில் இருந்திருந்தால், கூட்டுக் கொடுப்பனவிலிருந்து பெறக்கூடிய மேலதிக கொடுப்பனவு என்ன?

III. அப்படியாயின் மேலதிக செலவைப் பெறுவதற்கான கால அளவு என்ன?

IV. பயணச் செலவு விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான குறைந்த கால அளவு என்ன?

*(புள்ளிகள் 10 )*

(9)

I. ஒரு கிடைப்படத்தில் இருக்க வேண்டிய இரண்டு முக்கிய கூறுகளை தரவும்.?

II. கிடைப்படமிடலில் பயன்படுத்தப்படும் பின்வரும் சுருக்கெழுத்துக்களை விவரிக்கவும்..

(அ) இ·வி·ப (F.V.P)

(ஆ) இ.பி.ப (F.T.P)

(இ) இ.உ.ஆ.ப (F.S.P.P)

(ஈ) இ.கொ.ப (F.C.P)

(உ) ஆ.ப (P.P.) *(புள்ளிகள் 10 )*

(10) ஒரு நில அளவையாளர் களத்தில் இல்லாதபோது, பழைய கள புத்தகத்தின் உதவியுடன் பழைய முளைப் புள்ளிகளைக் கண்டறியும் பணியை எப்படிச் செய்வீர் என்பதைக் குறிப்பிடவும்.

*(புள்ளிகள் 10 )*